61

# குதம்பைச் சித்தரின் வாழ்வியல்

**சி. நிதர்சனா [1] & முனைவர் ச.பிரியதர்சினி [2]**

**[1] முதுகலை முதலாமாண்டு தமிழ் , [2] இணைப்பேராசிரியர்,**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்  மகளிர் உயர்கல்வி நிறுவனம்**

**கோயம்புத்தூர் - 641043**

**மின்னஞ்சல் – nidharsiva2004@gmail.com priyadharshini_tam@avinuty.ac.in**

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் இலக்கியங்களில் சித்தர் இலக்கியம் என்பது ஒரு தனி இடத்தை வகிக்கிறது. சித்தர்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு சித்தர்களின் பாடல்கள் அமைகிறன. சித்தர்கள் தங்களின் வாழ்க்கையில் முக்கியமாக சாதி சடங்கு முறைகளை ஆவேசமாக எதிர்த்தனர். சித்தர்கள் பொதுவாகவே வீட்டின் முன் அடைந்தவர்கள். அதன் பின்னரே துறவி நிலையை அடைகின்றனர். சிந்தையில் தெளிவு கொண்டவன் சித்தன் என்பது பொதுவான கருத்தாகும். ஆனால் சிவனே அவன் என்று உரைக்கும் படி இருப்பவன் சித்தன் என்று வால்மீகர் கூறுகிறார். சித்தர்கள்பொதுவாக எட்டு வகை சித்துகளைக் கற்றுக் கொண்டவர்களே அவைகள் அட்டமா சித்திகள் என்று அழைக்கப்படுகிறது . அவை: 1.அணிமா 2. மகிமா 3. கரிமா.4 லகிமா 5. பிராப்தி 6.பிரகாமியம்.7 ஈசத்துவம் 8. வசித்துவம் ஆகும்.சித்தர்கள் ஞானியராகவும் யோக்கியராகவும் விளங்குகின்றனர்பல்வேறு மருத்துவக் கலையிலும் யோக ஆற்றலையும் தாந்திரிகங்களையும் வேதங்களையும் அறிந்தவர்கள் சித்தர்கள் ஆவர்.

விஞ்ஞானம் சார்ந்த செய்திகளையும் சித்தர்களின் பாடல் வழியே அறிய முடியும். உலகத்தில் மருத்துவம் வசித்துவம் தாந்திரீகங்கள் மட்டுமல்லாமல்அவர்தம் பாடல் அனுபவங்களின் வழி உடற்பயிற்சியினாலும் உள்ளத்தை பக்குவப்படுத்தவும் முடியும் என்பதே ஆகும் தனக்குள்ளே இருக்கும் இறை சக்தியை உணர்ந்து சரியான முறையில் அதனை கற்றுக் கொண்டு. அதனை தங்களின் பாடல்களின் வழி இவ்வுலகத்திற்கு தேவையான வாழ்வியல் நெறிகளை அமைத்துள்ளனர். அவ்வகையில் பதினெண் சித்தர்களும் பல்வேறு பதிவுகளை உலகத்திற்கு அளித்துள்ளனர். பதினெண் சித்தர்களின் ஒருவரான குதம்பை சித்தர் வாழ்வியலை இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்:**

தவம் – பட்டயம் – நடுவனை – மெய்ஞானம் – வெட்டவெளி

**முன்னுரை:**

சித்தர் பாடல்கள் தமிழ் இலக்கியத்திற்கு வளர்ச்சி பெறும் வழிகாட்டியாக அமைகிறது. உயர்த்திக் கொண்டுவது மட்டுமல்லாமல் உலக மக்களின் உயர்வுக்கு பல்வேறு பணிகளையும் செய்துள்ளார்
மக்களின் மன இருளைப் போக்கி ஞான ஒளி பெறுவதற்கான சிந்தனைச் செல்வங்களை வழங்கியுள்ளார்.. சித்தர்கள் காலந்தோறும் மானுட சமூகத்தை சீர் கெடாமல் வைத்திருக்கும் சீர்த்திருத்தக் காரர்கள் ஆவார்கள். சித்தர்களுக்கு பல்வேறு சமயத்தில் பல்வேறு பொருள் பொதிந்த சொற்கள் உண்டு அவற்றுள் தமிழில்:அறியவர்,ஆங்கிலத்தில்: மெய்ஞானவாளர், வடமொழியில்: ஞானியர், இஸ்லாமியத்தில் .சூபியர்:மறைமெய்ஞானியர், சீனத்தில் தாவோ : இயற்கைவாணர் என்று பொருள் வழங்குவது உண்டு. சித்தர்களின் கொள்கையில் இறைவன் ஒருவரே. சித்தர்கள் தங்களின் உடலைத் தவம் செய்து அழியா உடலாகவும் உருவாக்கிக் கொண்டார்கள். அட்டமா சித்திகளைச் செய்வதில் வல்லுநர்கள். உடல் என்ற பந்தம் தாண்டி சித்தர்கள் கோடிக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்ததாக சித்தர்களின் வரலாறு தெரிவிக்கிறது.

தங்களின் மரணத்தை அவர்களே தீர்மானிக்கும் சக்தி படைத்தவர் சித்தர்கள். பெரும்பாலும் ஜீவசமாதி அடைகின்றனர். குதம்பை சித்தரின் பாடல்களின் வழியே அவர் உணர்த்துகின்ற சில வாழ்வியல் குறித்த பதிவுகளை ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை கட்டுரை அமைகிறது.

**குதம்பைச் சித்தர்:**

சித்தர்களில் ஒருவரான குதம்பைச் சித்தர் மனித வாழ்க்கைக்கு தேவையான ஒழுக்க நெறியை அமைப்பதற்காக பல்வேறு வாழ்வியல் அனுபவங்களை எடுத்துரைத்துள்ளார்.

இவர் கோனார் இனத்தைச் சார்ந்தவர் என்றும் இவர் 1400-1450 இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவர் என்று கருதப்படுகிறது." குதம்பை "என்பது பெண்கள் காதில் அணியும் அணிகலனை குறிக்கிறது. குதம்பைச் சித்தர் இயற்பெயர் தெரியவில்லை. பெண்களை முன்னிலைப்படுத்தி "குதம்பாய்" என்று இவரது பாடல்கள் அமைந்துள்ளன. ஆகவே இவரை "குதம்பைச் சித்தர் "என்று அழைத்தனர். இவரது பாடல்கள் அனைத்தும் கும்மி மெட்டைச் சார்ந்தவையே நக்கலும் நையாண்டியும் மட்டுமல்லாது சமூக அவலத்தையும் செம்மொழி நடையில் அமைந்துள்ளதை இவரது பாடல்களில் காண முடியும். தனிமையை விரும்பும் குதம்பைச் சித்தர் ஒரு காட்டுக்குள் சென்று ஒரு மரத்தின் கீழ் தவநிலையை அடைந்தார் அவர் அடைந்த அனுபவத்தை மற்ற மனிதர்களுக்கும் புரியும்படிச்சொல்லுதல் வேண்டும் என்பதற்காக அவரது அனுபவத்தை தம் பாடல்களின் வழி இச்சமுகத்திற்கு உணர்த்துகிறார். இவரதுபாடல்கள் கண்ணிகள் என்றும் அழைக்கப்படுகிறது

"குதம்பாய்" என்பது தனிச் சொல்லாக அமைகிறது. குதம்பைச் சித்தரின பாடல்கள் யோகத்தையும் ஞானத்தையும் புகழ்ந்து பாடுகின்றன . மேலும் இவரது பாடல்கள் எளிய வடிவில் மக்களுக்கு புரியும் நடையில் அமைந்துள்ளது.

வெட்ட வெளிதன்னை மெய்யென்றறு
இருப்போர்க்குப்
குதம்பாய் பட்டயம் ஏதுக்குடி!குதம்பாய்
பட்டயம் ஏதுக்குடி.

(கு.பா.1)

கடவுளுக்கு உருவமில்லை வெட்டவெளியிலேயே கடவுள் என்று உண்மையை அறிந்தவர்களுக்கு ஆடம்பரமான விருதுகள் எல்லாம் எதற்கு என்று கேட்கிறார். இவை குதம்பைச் சித்தர் பாடல்களில் முதல் கருத்தாக அமைகிறது.

உயிர்கள் மீது ஆசை, தவச்சிறப்புகள், சாதி பேத இழிவு,அறியாமை,சமநிலைகள்,வாத நிலை போன்ற கருத்துக்களை இச்சமூகத்திற்கு உணர்த்தும் வகையில்அவர் தம் பாடல்கள் அமைந்துள்ளன..

பெண்களை அழைத்து பல வினாக்களை எழுப்புவதாகவும் அமைகிறது. இவரது பாடல்கள் ஆழ்ந்த பொருளை உணர்த்துகிறது. மற்ற சித்தர் பாடல்களிலன் காண முடியாத புதிய அமைப்பை இவரது பாடல்களில் வழி காணலாம் . இறுதியில் எதுக்கடி குதம்பாய் என்ற வார்த்தை பொதுவாக அமைகிறது.. பாடல்கள் சிந்து வகையைச் சார்ந்தவையே ஆகும். இறுதியில் மயூரம் என்ற இடத்தில் சித்தி அடைந்துள்ளார்

**குதம்பை சித்தர் தவச் சிறப்புகள்:**

தவநிலை ஒன்றை சாராத மாந்தர்கள்
அவநிலை யாரடி -குதம்பாய்
அவனநிலை யாரடி. (கு.பா.121)

குதம்பாய்! தவநிலை சாராதவர்கள் இழிந்த நிலையில் என்றுமே அடைவார்கள்.

காமனை வென்று கடுத்தவஞ் செய்வோர்க்கு
ஏமன் பயப்படுவான் -குதம்பாய்
ஏமன் பயப்படுவான்.

(கு.பா.123)

குதம்பாய்! காமத்தை வென்று கடுமையான தவத்தை உடையவனை பார்த்தால் எமனும் பயப்படுவான். ஆதலால் தவத்தை செய்து வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்க என்று அறிவுறுத்துகிறார்

**யோக நிலையின் நன்மைகள்:**

நாட்டத்தைப் பற்றி நடுவனை சேர்வோர்க்கு

வாட்டங்கள் ஏதுக்கடி- குதம்பாய் !

வாட்டங்கள் ஏதுக்கு அடி.

(கு.பா.9)

குதம்பாய் ! யோகப் பயிற்சியில் தன்னுடைய நாட்டத்தை புருவத்திலேயே கொண்டவர்கள் சேர்ந்தவர்கள் என்றும் குறைவின்றி வாழ்வார்கள்.

யோகத்தான் வேண்டி உறுதிகொள்யோக்கிக்கு

மோகத்தான் இல்லையடி- குதம்பாய்

மோகன்தான் இல்லையடி

(கு.பா.124)

குதம்பாய் . யோகத்தை விரும்பச் செய்யும் மன உறுதி உடைய மாண்டவர்க்கு மோகம் தான் இல்லை என்று அறிக யோக தரக்கூடிய நன்மை மகத்துவத்தை எடுத்துரைக்கிறார்.

**ஆசையை விலக்குதல்:**

இச்சைப் பிறப்பினை என்னிக்கும் என்றது
நிச்சய மாகுபடி குதம்பாய்

நிச்சய மாகுபடி. (கு.பா.114)

குதம்பாய்! ஆசையானது மறுபடியும் பிறக்குமாறு செய்யும் ஆகவே ஆசையை விட்டு விலகும் படி எச்சரிக்கிறார்

**மெய்ஞானத்தின் சிறப்புகள்:**

மெய்ஞான நீக்கியே பூரணம் சார்தற்கு
மெய்ஞானம் வேண்டுமடி- குதம்பாய்

மெய்ஞானம் வேண்டுமடி.

(கு.பா.131)

குதம்பாய் !பொய்யான ஞானத்தை நீக்கி பூரணமான இறைவனைச் சேர வேண்டுமானால் மெய்ஞானம் வேண்டும்.

மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞானிக்கு
கற்பங்கள் ஏதுக்கடி அடி -குதம்பாய்

கற்பங்கள் ஏதுக்கடி.

(கு.பா.2)

உண்மையான பொருளை அறிந்து விளங்குகின்ற மெய்ஞானிக்கு உடலை வலுப்படுத்தக்கூடிய காயகற்பம் என்னும் மருந்து கூட வேண்டாம்.கவலையற்ற உள்ளமே நோயற்ற வாழ்வை நிச்சயம் தரும் ஆதலால் அதனைக் குறித்து கவலைப்பட வேண்டாம் என்கிறார்.

**சாதி பேத இழிவுகள்:**

பற்பல சாதியாய்ப் பாரிற் பகுத்தது

கற்பனை ஆகுமடி- குதம்பாய்

கற்பனை ஆகுமடி. (கு.பா.140)

குதம்பாய் பற்பல சாதிகளாய் உலகத்தில் பிரித்து வைத்தது வெறும் கற்பனையாகும்.

ஆண் சாதி பெண் சாதி யாகும் இரு சாதி

வீண் சாதி மற்றவெல்லாம் குதம்பாய்

வீண் சாதி மற்றதெல்லாம். (கு.பா.137)

குதம்பாய்,ஆண் பெண் என்று இரு சாதியை தவிர மற்ற சாதிகள் எல்லாமே வெறும் வீண் சாதிகளே.

இவ்வாறு தனது பாடல்களில் சாதி என்று ஒன்று இல்லை என்பதை தீர்க்கமாக உணர்த்துகிறார்

**அறியாமை நீக்குதலின் சிறப்புகள்:**

செத்தபின் சப்பாரை செத்தார்க்குச் சேவித்தால்

சத்தம் அறிவாரடி -குதம்பாய்

சத்தம் அறிவாராடி. (கு.பா.193)

குதம்பாய், செத்த வீட்டில் சாவுப் பறையை முழங்குகிறோம் இப்படிச் செய்தால் செத்தவர் காதில் கேட்குமா பிறகு ஏன் இதைச்செய்ய வேண்டும் என்று கேள்வி எழுப்புகிறார்.

பிள்ளைகள் செய்த வண்ணம் பெற்றோர்க்கு
உருமென்றால்

வெள்ளறிவு ஆகும்படி-குதம்பாய்

வெள்ளறிவு ஆகுமடி. (கு.பா.195)

குதம்பாய், பிள்ளைகள் செய்த தர்மம் பெற்றோருக்கு சேரும் என்பது அறியாமையே ஆகும்.

உலகத்தில் மானுடர்க்கு அறியாமையை நீக்குவதால் ஏற்படும் நன்மைகளையும் பதிவு செய்துள்ளார்

**உயிரோடு செல்பவை:**

முத்தி அளித்திடு மூர்த்தியைப்போற்றி செய்
பத்தியும் பின்வருமே குதம்பாய்

பத்தியும் பின்வருமே. (கு.பா.113)

குதம்பாய் முத்தி அளிக்கும் கடவுளைப் போற்றினால் அந்தப் பக்தியும் பின்னால் வருமே. என்று இறைவனை உணர்ந்து போற்றுவதனால் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைக்கிறார்.

**குதம்பை ச்சித்தரின் கொள்கைகள்:**

சித்தர்களின் ஒருவரான குதம்பைச் சித்தர் அவரது இல்லற வாழ்க்கையை விட்டு தவநிலை அடைந்தார் பின்னர் அவர் அனுபவத்தை மற்ற மானுடத்திற்கும் கொடுக்க வேண்டும் என்பதே ஆகும். கடவுளை அடைவதற்கு உலக இன்பங்கள். கோபம். தன்மானம்.மாயை.போன்றை

முற்றிலும் ஒழித்தல் வேண்டும் மேலும் இவ்வுலகில் நிலையான பொருள் ரீதியான பேரின்பம் என்பது கடவுளை அடைதல் மட்டுமே ஆகும். குதம்பைச் சித்தரின் பாடல்கள் குட்டி மந்திரம் என்றே அழைக்கப்படுகிறது.இறைவனை அடைதல் வேண்டும் உண்மையான தவநிலையை இருத்தல் வேண்டும்.இதுவேகுதம்பை சித்தரின் வலியுறுத்தும் கொள்கையாகும்

**நிறைவாக:**

சித்தர்கள் அனைவரும் பல்வேறு ரகசியமான வாழ்க்கையை வாழ்ந்து பல்வேறு பாடல்களை மானுடத்திற்கு உணர்த்தும் வகையில் பாடியுள்ளனர் . உடல் என்ற பந்தத்தை தாண்டி பல்வேறு ஆண்டுகள் சித்தர்கள் வாழ்ந்ததாக சித்தர் வரலாறு மூலம் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு வாழ்ந்தவர்கள் இயல்பு வாழ்க்கையை சித்தர்களின் பாடல் வழி அறிய முடிகிறது.

ஒழுக்கத்தையும் வாழ்க்கைக்கான நெறியையும் இவ்வுலகத்திற்கு உரைப்பதற்கு சித்தர் பாடல்கள் மிகவும் உதவியாக அமைகிறது அதில் உலக ஆசைகளை எவ்வாறு நீக்குதல் வேண்டும், இயற்கை பொருளைத் தேடி இறைவனை அடையும் முறையினையும் குதம்பைச் சித்தர் பாடல்களில் வழி அறியலாம்.

**துணை நூற் பட்டியல்:**

1.இரா.திருமுருகன்- சித்தர் பாடல்கள்

2.சுவாமி சிதம்பரனார்: சித்தர் கண்ட விஞ்ஞானம்,(மணிவாசகர் பதிப்பகம்).

3.பி.என் பரசுராமன்: சித்தர் சரித்திரம்.

4.பேராசிரியர்.முனைவர் அ. கருணாநிதி: சித்த இலக்கியங்களில் சமூகப் பார்வை.